**செய்தி வெளியீடு எண்: 986** **நாள்:22.12.2020**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 21.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத் துறை சார்பில் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், குச்சனூர் பேரூராட்சி, அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதிக் கட்டடம் மற்றும் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயில் பகுதியில் சுரபி நதிக்கரையின் படித்துறை வாய்க்காலில் 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தளம் மற்றும் சிமெண்ட் பேவர்பிளாக் கல் கட்டுமானம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மக்களின் மன மகிழ்வுக்கு மூலக் கூறாகவும், வேலைவாய்ப்பினையும், அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகித்து வரும் சுற்றுலாவை மேம்படுத்துதல், தொடர்ந்து அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு புதிய சுற்றுலா மையங்களை தெரிவு செய்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், குச்சனூர் பேரூராட்சி, அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயிலில் தரை மற்றும் முதல் தளத்துடன், 6,900 சதுர அடி பரப்பளவில், 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தங்கும் விடுதிக் கட்டடம் மற்றும் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயில் பகுதியில், சுரபி நதிக்கரையின் படித்துறை வாய்க்காலில், 176 சதுர மீட்டர் பரப்பளவில் 23 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தளம் மற்றும் சிமெண்ட் பேவர்பிளாக் கல் கட்டுமானம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி என். நடராஜன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ்.இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., சுற்றுலாத் துறை ஆணையர் திரு.டி.பி.ராஜேஷ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**